# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.411/2019 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா- 01 ( PW- 01 ) |
| பெயர் | :- | சரவணன் |
| தேதி | :- | 22-09-2025 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

வழக்குரையில் கண்டுள்ள விவரங்கள், அத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பற்றிய விவரங்கள், எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள், முதல்விசாரணைக்கான ஆணையுறுதி பத்திரத்தில் கண்டுள்ள விவரங்கள் ஆகின எனக்குத் தெரியும்.

PPS Rapiers என்ற நிறுவனம் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். அந்த நிறுவனத்தில் நான் முதலீடு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். PPS Rapiers நிறுவனத்தை இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதன் உரிமையாளரை சேர்த்துள்ளேன்.

கலைச்செல்வி என்பவருக்கும் PPS Rapiers என்ற நிறுவனத்திற்கும் தொடர்பு உண்டா என்றால் தொடர்பு இருந்தது. PPS Rapiers-ல் கலைச்செல்வி பங்குதாரா, இயக்குநனரா என்றால் அது எதுவும் இல்லை. மேற்சொன்ன நிறுவனத்தில் உரிமையாளரின் அண்ணி கலைச்செல்வி. PPS

Rapiers நிறுவனத்திற்கும் கலைச்செல்விக்கும் என்ன தொடர்பு என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் கலைச்செல்வியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கலைச்செல்வி கடனுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் உண்டா என்றால் இல்லை. நான் கலைச்செல்விமீது தனியாக வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதன் எண் C.O.S.No. 18/2019. அந்த வழக்கின் முடிவு கலைச்செல்விக்கு சாதகமாக ஆனது என்றால் சரிதான். எனக்கு எதிராக தள்ளுபடியானது என்றால் சரிதான்.

இந்த வழக்கிற்குமுன் பிரதிவாதிக்கு 16.08.2019- தேதியன்று அனுப்பிய அறிவிப்பை கலைச்செல்விக்கும் சேர்த்து அனுப்பினேன் என்றால் சரிதான். C.O.S.No.18/2019 வழக்குப்பற்றி இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எனக்கும் பிரதிவாதிக்கும் வணிக முறையில் என்ன ஒப்பந்தம் ஏற்பட்டது என்றோ அதன் நிபந்தனை கூறுகள் என்னவென்றோ வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அது வாய்மொழி ஒப்பந்தம். வாய்மொழி ஒப்பந்தம் குறித்தும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். எதற்காக பிரதிவாதி 22,00,000/-உரூபாய் கேட்டார் என்று காட்ட குறிப்பிட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

அருள்மாரியப்பன் என்பவர் எனக்கு பள்ளி பருவத்தில் இருந்து நண்பர். அருள்மாரியப்பன் மூலம்தான் பிரதிவாதியை தெரியும் என்றால் சரிதான். கலைச்செல்வி அருள்மாரியப்பனின் மனைவி என்றால் சரிதான்.

நான் கலைச்செல்விமீது தாக்கல் செய்த வழக்கை நான் திரும்ப பெற்றுக் -கொண்டதன்பேரில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல்விசாரணையில் தாக்கல் செய்துள்ள நிரூபண ஆணையுறுதியில் மேற்சொன்ன வழக்கு திரும்ப பெறப்பட்டது குறித்தோ எதற்காக திரும்ப பெறப்பட்டது என்பது குறித்தோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அந்த வழக்கில் திரும்பபெறுவதற்காக நான் தாக்கல்செய்த குறிப்பாணையில் என்ன காரணத்திற்காக திரும்ப பெறப்படுகிறது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பாக எதுவும் சொல்லவில்லை.

அருள்மாரியப்பனும் பிரதிவாதியும் என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதுச் சம்மந்தமான ஆவணம் வாதி தரப்பு 04-ஆம் சான்றாவணம் என்றால் சரிதான். அந்த புகாரை பிரதிவாதி என்மீது கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அருள்மாரியப்பன் பிரதிவாதியின் பெயரையும் தன்னிச்சையாக எழுதி புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

மோகன், கனகம், பிரவீன்குமார் ஆகியோர் நான் சொன்னதன்பேரில் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்னவர் கொடுத்த பணத்திற்கும் சேர்த்து வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான்தான் பணம் கொடுத்து அவர்கள் மூலம் கொடுக்க சொன்னேன். இந்த சங்கதியை வழக்குரையில் சொல்லி -யுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் எதுவும் சொல்ல -வில்லை என்றும் தற்போது பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன மூவரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

வியாபார கணக்கு வழக்குகளை கேட்டு பிரதிவாதிக்கு நான் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் கணக்குகளை ஒப்படைக்க கோரி நிவாரணம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. நான் PPS Rapiers நிறுவனத்தில் கூட்டாளியா, முதலீட்டாளரா என்றால் முதலீட்டாளர். நானும் என் நண்பர்களும் PPS Rapiers நிறுவனத்தில் முதலீடு செய்தோம் என்று காட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்யப் -பட்டுள்ளதா என்றால் இல்லை. வாய்மொழி ஒப்பந்தம் எவ்வளவு காலத்திற்கு ஏற்படுத்தப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

நான் கொடுத்த பணத்தை வைத்து என்ன இயந்திரம் வாங்கப்பட்டது, எப்போது வாங்கப்பட்டது, எவ்வளவு விலைக்கு வாங்கப்பட்டது என்று குறிப்பாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மற்றோர் 1,00,000/- உரூபாயை எப்போது கொடுத்தேன் என்று வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

அவசிய தரப்பினரை சேர்க்காத சட்ட நுட்பமாக குறைபாட்டிற்காக இந்த வழக்கு தள்ளுபடிசெய்ய வேண்டியதாக உள்ளது என்றால் சரியல்ல. நான், கலைச்செல்வி, அருள்மாரியப்பன் ஆகிய மூவரும் சதிசெய்து பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பிரதிவாதி அருள்மாரியப்பனுடன் சேர்ந்து என்மீது புகார் கொடுத்ததுபோல் ஓர் ஆவணத்தை புனைந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் கலைச்செல்விமீது வழக்கு தொடுப்பதுபோல் தொடுத்து -விட்டு பின்னிட்டு திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

(இருதரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது.)

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.